*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 202/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-13)***

*Name / Father's Name:* ***திருமதி.பூங்கொடி க/பெ. ராஜசேகரன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.05.2026.**

துவக்க நேரம் 11.35 F.N

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி முதல் 6ம் எதிரி ஆஜரில்லை. 2 முதல் 6 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**2 முதல் 6 எதிரிகள் தரப்பில் u/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பனமரத்துப்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.07.2022ம் தேதி மனுதாரர் திருமதி.விமலா என்பவர், இந்நீதிமன்றத்தில் கொடுத்த மனுவின் பேரில் இந்நீதிமன்றம் விசாரித்து, Crl.M.P.2554/2021, dt:11.07.2022ம் தேதி U/s.156(3) of CrPC-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு உத்தரவிட்டதின் பேரில், கடந்த 19.07.2022 அன்று பகல் 03.00 மணிக்கு ஆத்துார், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நிலைய அலுவலலில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் திருமதி.மல்லிகா என்பவர், புகார்தாரர் திருமதி.விமலாவின் கடந்த 19.07.2021ம் தேதியிட்ட புகாரினை பரிசீலித்து, அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண்.21/2022 ச.பி 323, 324, 498(A), 494, 506(1) இதச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகின்றன).**

2) பின்பு முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துவிட்டு, அன்றைய தினமே காவல் உதவி ஆய்வாளர் திருமதி.மல்லிகா அவர்கள் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே மாலை 05.00

மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் வீராசாமி, தியாகராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**). பின்னர் வழக்கின் சாட்சிகளான விமலா, லட்சுமி, விக்னேஷ், பெருமாள், வீராசாமி, தியாகராஜன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) இவ்வழக்கின் விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால், 1 முதல் 7 எதிரிகளை கைது செய்ய தேடிவந்த நிலையில் எதிரிகள் அனைவரும் முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்தது தெரியவந்ததால், அவர்களை கைது செய்யவில்லை. பின்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.மல்லிகா அவர்கள் வழக்குக்கோப்பினை தொடர் விசாரணைக்காக எனது வசம் ஒப்படைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சாட்சிகள் விமலா, லட்சுமி, விக்னேஷ் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான விமலா, லட்சுமி, விக்னேஷ் ஆகிய மூவரும் ஆத்தூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர்கள் மருத்துவரிடம் சொல்லிக்கொள்ளாமல் மருத்துவமனையைவிட்டு வெளியேறிவிட்டதால் மருத்துவர் திரு.அருண்.G.பெகின் என்பவர் மேற்படி மூன்று நபர்களுக்கும் காயத்தின் தன்மை குறித்து குறிப்பிடமுடியாது என்று கூறி வழங்கிய காயச்சான்றிதழை பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். (**விமலா, லட்சுமி, விக்னேஷ் ஆகியோர்களின் காயச்சான்றிதழ்கள் முறையே அ.த.சா.ஆ.7, அ.த.சா.ஆ.8 மற்றும் அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**).

5) மேலும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட புகார்தாரரான திருமதி.விமலா என்பவருக்கு வரதட்சணை கொடுமை நடந்துள்ளதா என்பது பற்றி சேலம் மாவட்ட சமூக நல அலுவலரான திருமதி.அருள்மொழி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். திருமதி.விமலா மற்றும் திரு.பெரியசாமி ஆகியோர்களுக்கு நடந்த திருமணம் குறித்தான தகவல்களை பெற தலைவாசல் வட்ட சார்பதிவாளர் திரு.ரமேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து திருமண பதிவுச்சான்றை பெற்றுள்ளேன். (**திருமண பதிவுச்சான்று அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6) இவ்வழக்கின் 5ம் எதிரியான பிரியா க.பெ பெரியசாமி என்பவருக்கு இராசிபுரத்தில் பிரசவம் பார்த்து ஆண்குழந்தை பிறந்ததாக கூறிய இராசிபுரம், சாந்தி மருத்துவமனையின் மருத்துவர் திருமதி.சாந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, 5ம் எதிரி பிரியா என்பவருக்கு ஆண்குழந்தை பிறந்ததற்கான சான்றினை பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். (**5ம் எதிரி பிரியா என்பவருக்கு ஆண்குழந்தை பிறந்ததற்கான சான்றிதழ் அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) மேற்படி 5ம் எதிரி பிரியா என்பவருக்கு ஆண்குழந்தை பிறந்ததற்கான பிறப்பு சான்றிதழ் வழங்கிய இராசிபுரம் வட்ட, பிறப்பு இறப்பு அலுவலர் திரு.சிவா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மேற்படி ஆண்குழந்தையின் பிறப்பு சான்றிதழ் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். (**5ம் எதிரி பிரியா என்பவருக்கு பிறந்த ஆண்குழந்தையின் பிறப்பு சான்றிதழ் அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

8) பின்பு இவ்வழக்கில் முதற்கட்ட புலன்விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திருமதி.மல்லிகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 323, 324, 498(A), 494, 506(1) இதச-லிருந்து 323, 324, 498(A), 494, 506(1), 109 இதச-ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரிகளுக்கெதிராக ச.பி 323, 324, 498(A), 494, 506(1), 109 இதச-ன் கீழ் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்தேன்.

**1 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நான், தயார் செய்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து 9 மாதங்கள் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் சம்பவயிடத்திற்கு செல்லாமல், சம்பவயிடத்தில் எந்த சாட்சிகளையும் விசாரிக்காமல், சம்பவயிடத்தில் எந்த ஆவணங்களையும் தயார் செய்யாமல், இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை

செய்த காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்த ஆவணங்களை வைத்துக்கொண்டு, மற்ற ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரிகளுக்கெதிராக இவ்வழக்கில் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் முறைப்படி விசாரணை செய்திருந்தால் இவ்வழக்கின் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்யவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.22 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.05.14 16:40:25 +0530

Judicial Magistrate No.2, Attur.